பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 06 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

- வேளாண் காடுகள் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் விவசாய நிலங்களில் மரங்களை வெட்டுவதற்கான மாதிரி விதிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

- தமிழகத்தில் சாலைக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் ஒருசில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் 97 ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

வேளாண் காடுகள் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் விவசாய நிலங்களில் மரங்களை வெட்டுவதற்கான மாதிரி விதிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், விவசாய முறைகளில் தேவையற்ற நடைமுறைகளை நீக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென மாநில அளவிலான குழுக்கள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழு வேளாண் நிலங்களில் காடுகள் வளர்ப்பது குறித்த ஆலோசனைகளை மாநில அரசுகளுக்கு வழங்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பாவதுடன் நிலப்பரப்பில் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க உதவிடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் சாலைக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் 25வது கோடை விழாவை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பழங்குடியின் மக்கள் அரசின் திட்டங்களை அறிந்து பயன்பெறும் வகையில் இதுபோன்ற விழாக்கள் நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக அமிர்தி முதல் பரமனந்தல் வரை உள்ள சாலையை மேம்படுத்துவதற்கு 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடிப் பாலம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருவதாகவும், இது நாட்டின் அடையாளமாக திகழ்கிறது என்றும் திரு. எ.வ. வேலு தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான இணையதளத்தில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாக வெளிவரும் செய்திகளை மாநில அரசு மறுத்துள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதுபோன்ற செய்திகளை கண்டு மாணவர்கள் எவ்வித அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், மாநில அரசின் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நடப்புக் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை இணைய வழியாக நடைபெற்று வருவதாகவும், இதுவரை மொத்தம் 2 லட்சத்து ஏழாயிரத்து 915 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

விமான விபத்து போன்ற அவசர காலங்களில் துரிதமாக செயல்படுவது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருவதாக சென்னை விமான நிலைய இயக்குநர் திரு. சி.வி. தீபக் தெரிவித்துள்ளார்.

சென்னை பரங்கிமலையில் நேற்று நடைபெற்ற ஒத்திகை நிகழ்ச்சியில் 10 துறைகள் கலந்துகொண்டதாக

இணைந்து இந்த ஒத்திகை நடத்தப்பட்டதாக எமது செய்தியாளரிடம் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஒருசில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்டம் ஆழியாறு அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஒகேனக்கல் காவிரியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte – Dandapani – 30 sec)**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து அணை, அதன் முழு கொள்ளளவை எட்டவுள்ளது.

இதனையடுத்து மேட்டூர் அணையில் இருந்து உபரி நீர் திறக்க வாய்ப்புள்ளதால் தாழ்வான பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு நகராட்சி ஊழியர்கள் தண்டோரா மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

காங்கோ – ருவாண்டா இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அமெரிக்கா முன்னிலையில் இரு நாடுகளுக்கும் இடையேயான அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

------------

சூடானில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

------------

**Raw** உளவு அமைப்பின் புதிய செயலாளராக திரு. **Parag Jain** நியமிக்கப்பட்டுள்ளார்.

------------

அரசின் விதிமுறைகளை அறிந்துகொண்டு சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பொதுமக்கள் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்று கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சிவஞானம் தெரிவித்தார்.

------------

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட நிர்வாகங்கள் இணைந்து நடத்திய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 271 பேருக்கு பணி நியமன ஆணைகளை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் வழங்கினார்.

------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 19 ஆயிரத்து 551 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

------------

திருச்சி மாவட்டம் துறையூரில் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

------------

ஈரோடு மாவட்டம் காங்கேயம் அருகே தனியார் பள்ளியில் மரம் உடைந்து விழுந்ததில் மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.

------------

தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான புகையிலைப் பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

------------

சென்னை திருவல்லிக்கேணி பகுதியில் 2 கிலோ போதைப்பொருளை பறிமுதல் செய்த காவல்துறையினர் இது தொடர்பாக 2 பேரை கைது செய்தனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் 97 ரன் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

நாட்டிங்ஹாமில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட்செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 210 ரன் எடுத்தது.

211 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 14 புள்ளி 5 ஓவரில் 113 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் சேப்பாக் அணி, மதுரை அணியையும், கோவை அணி – சேலம் அணியையும் வென்றன.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் நெல்லை அணி – திருப்பூர் அணியையும், திண்டுக்கல் அணி – திருச்சி அணியையும் எதிர்கொள்கின்றன.

---------------

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, தன்வீ ஷர்மா ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி, 21-13, 21-15, 21-14 என்ற செட் கணக்கில் தைவானின் **Tien Chen**-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் தன்வீ ஷர்மா 21-14, 21-16 என்ற செட் கணக்கில் யுக்ரைனின் **Polina Buhrova**-ஐ வென்றார்.

--------------

துனீஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் நிதின் குமார் சின்ஹா – ஸ்பெயினின் **Alejandro** இணை பட்டம் வென்றது.

-------------

ஆசியக் கோப்பை மகளிர் கால்பந்து போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று ஈஸ்ட் திமோர் அணியை எதிர்கொள்கிறது.

15 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் சீனா தங்கம் வென்றது.